சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.16/2021

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 20ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. ராஜேந்திரன்<br>த/பெ. ஆறுமுகம் | நாள்.20.06.2025 |
| வயது. 65 | வட்டம் |
| கிராமம். அரசூர் | மாவட்டம். |

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் வழக்கில் வாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். பிரதிவாதி 5.7.2019 அன்று எழுதிக் கொடுத்த உறுதி மொழி ஆவணம் வா.த.சா.ஆ.1. பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுலவக நகல் வா.த.சா.ஆ.2. அதற்கான ரசீது வா.த.சா.ஆ.3. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்